## இந்திய கத்தோலிக்க நலவாழ்வு சங்கம்




# (தொற்றும் தன்மை கொண்ட நோய்கள்) (சிடிஸ்)

# தொற்று நோய்கள் (சிழ)

தொற்றுநோய் எனபது ஒருவரிடமிருந்து மற்றோருவருக்கு பல்லேறு வழிகளில் பரவுவதாகும், அவை : இரத்தம் மற்றும் உடல் திரவங்கள், காற்றின் மூலமாக பரவகூடிய நச்சுகிருமியால் அல்லது விலங்குகள் மற்றும் பூச்சிகளின் மூலம் பரவுதல், பெரும் பான்மையான நேரங்ககில், இரத்தம் மற்றும் உடல் திரவங்களில் இருக்கக்கூடிய வைரஸ் மற்றும் பாக்டீரியாக்களாலே தொற்றுநோய்கள் பரவுகின்றன, உதாரணத்திற்கு, மஞ்சல்காமாலை மற்றும் எச்.ஐ.வி போன்றவை இரத்தம் மற்றும் உடல் திரவங்கள் மூலமாகவே பரவுகின்றன. மறுபுறம், காசநோய் என்பது காற்றுமூலம் பரவகூடியது. காசநோயால் பாதிக்கப்பட்டவர்கள் தும்மல், இருமல் மூலம் நுண் கிருமிகளை காற்றில் பரவவிடுகின்றனர். மலேரியா மற்றும் யானைகால் போன்ற நோய்கள், கொசுக்கள் மூலம் நோயாளிகளிடமிருந்து மற்றொருவொருக்கு பரவுகரது.

# தொழுநோய்











பாசி பேசிலரி



மல்டி பேசிலா

# தொழுநோய் என்றால் என்ன?

- தொழுநோய் என்பது மனித வரலாற்றில் பழமையான நோயாகும்.
- இது ஒரு பரம்பரை றோய் அல்ல.
- இது பாக்டீரியா / பூஞ்சையால் பரவக்கூடிய ஒரு நோய்.
- தொழுநோய் பெரும்பாலும் தோல் மற்றும் நரம்பை பாதிக்கும்.
- வெளுராகவோ, சிகம்பு அல்லது செம்பு நிற உணர்ச்சி இல்லாத தோல் தடிப்புகள் உடலிலோ அல்லது கை,கால்களில் தென்
- தென்படுவதே, தொழுநோயின் முதன்மையான அறிகுறிகள்.
- தொழுநோயை மருந்துகள் மூலம் முழுமையாக குணப்படுத்தலாம்.
- தொடக்க நிலையிலே கண்டுபிடித்தால், குறைபாடுகள் ஏற்படாமல் தவிர்க்கலாம். தொழுநோய் இரண்டு வகைபடும். அவை ப பாசிபேசிலரி (**Paucibacikualy**) மற்றும் மல்டிபேசிலரி (**Multibacilary)**

| | பாசிபேசிரியின் குறிகுணங்கள் | மல்டிபேசிலரியின் குறிகுணங்கள் |
|---|---|---|
| தேமல் | 1 முதல் 5 வரை உணர்ச்சியற்ற தேமல் உள்ளவர்கள் இவர்கள் பெரும்பாலும் நோயை பரப்புவதில்லை | 5 தேமலுக்கு மேல் உள்ளவர்கள் கிருமி அதிகம் உள்ளவர்கள். தோல் பளப்பளப் பாகவும், எண்ணெய் பசையுடன் தென்படும். |
| நரம்பு | மெரும்பாலும் நரம்புகளை பாதிப்பதில்லை | தடித்த வலியுடன் கூடிய நரம்புகள். சிலநேரங்களில் தேமல் தென்படாமலே, உணர்ச்சியற்ற தன்மை ஏற்படும். |
| இரத்த பரிசோதனை | எதிர்மறையாக பிரதிபலித்தல் | எல்லாவற்றிலும் சாதகமாக பிரதிபலித்தல் |

# தொழுநோய் – உறுதிபடுத்தும் சோதனை



**பேனா முனையால் தேமல் இருக்கும் இடத்தில் தொடுதல்**

# <u>தொழுநோயை உறுதிப்படுத்தும் பரிசோதனை.</u>

**தொழுநோயை எப்படி கண்டறிவது?**

தொழுநோயை தோல் தொடுதல் மூலம் கண்டறியலாம், இது மிகவும் எளிமையாக கண்டறியும் முறையாகும்.

படி 1 : பால்பாயின்ட் பேனா முனையால் தெமலை தொடுதல்

படி 2 : தேமலில் பேனா முனையால் தொடும்போது எந்த உணர்வும் தென் படவில்லையெனில் உடனே மருந்து வமனைக்கு மேற்கொண்டு பரிசோதனைக்கு அனுப்பவும்.

# தொழுநோய்க்கான சிகிச்சை

தொழுநோயை கூடடு மருந்து சிகிச்சை (எம்.டி.டி– MDT) மூலம் முற்றிலும் குணப்படுத்தலாம்



கூட்டு மருந்து சிகிச்வை மருந்துகள்
அரசு மருத்துவமனையில் இலவசமாக
பெறலாம்



சிகிச்சைக்கு முன்பு



சிகிச்சைக்கு பின்பு

## தொழுநோய் சிகிச்சைமுறை

**தொழுநோயை (எந்த ஒருநிலையிலும்) முழுமையாக கூட்டு மருந்து சிகிச்சை (MDT) மூலம் குணப்படுத்தலாம்.**

- கூட்டு மருந்துக்கள் நமது அனைத்துஅரசு ஆரம்ப சுகாதார நிலையத்திலும், அரசு மருத்துவமனை, மாநகராட்சி மருந்தகங்களிலும் தரப்படுகிறது.
- சிகிச்சை காலம் 6 – 12 மாங்கள்.
- தொழுநோயை எந்த ஒரு கட்டத்திலும் முழுமையாக குணப்படுத்தலாம்.
- ஆரம்ப நிலையில் கண்டறிந்து சிகிச்சை அளித்தால் குறைபாடுகளை முற்றிலுமாக தவிர்க்கலாம்.
- உருக்குறை பாடுகள் ஏற்படின், அவற்றை தொழுநோய் திட்ட அலுவலகத்தில் கிடைக்கும் இலவச அறுவை சிகிச்சை மூலம் சரிசெய்துக் கொள்ளலாம்.

**நினைவில் மற்றும் பின்பற்ற வேண்டிய முக்கிய செய்திகள்.**

- பூஞ்சைகளால் ஏற்படக்கூடிய ஒரு பொதுவான நோய்தான் – தொழுநோய்
- வெள்ளை, சிவப்பு மற்று செம்பு நிறத்தில் உணர்ச்சியற்ற தேமல் உடலில் தோன்றின் மருத்துவரை அனுகவும்.
- கூட்டு மருந்து சிகிச்சையால் முற்றிலுமாக குணப்படுத்தலாம்.
- ஆரம்ப நிலையில் கண்டறிதல், உருக்குறைபாட்டை தவிர்க்க உதவும்.
- அனைத்து அரசு மருத்துவமனை, ஆரம்பசுகாதார நிலையத்திலும் இலவச சிகிச்சை பெறலாம்.
- ஓய்வூதியம் மற்றும் இலவச பாத பராமரிப்பு காலணிகனை அரசால் வழங்கபடுகிறது.
- தொழுநோயால் பாதிக்கப்பட்டவரை சுய உதவிக் குழுவில் சேர்ந்து அரசின் ஆதாயங்களை பெற உதவவேண்டும்.

# மலேரியா

**மலேரியாவால்
பாதிக்கப்பட்ட நோயாளி**




**மலேரியாநோய் பாதிக்கப்பட்ட
மனிதரிடமிருந்து ஆரோக்கியமான
மனிதனுக்கு அனோபலிஸ் கொசு
கடிப்பதன் மூலம் பரவுகிறது.**

# <u>மலேரியா என்பது என்ன?</u>


**மலேரியா என்றால் என்ன? எப்படி அது பரவுகிறது?**

- மலேலியாவானது, மனிதர்களுக்கு மத்தியில் அனாஃபிலிஸ் பேரினக் கொசுக்கள் மூலம் பரவும்.
- இது கொசுகடி மூலமாக. ஒரு பாதிக்கப்பட்ட நபரிடமிருந்து., ஆரோக்கியமான நபருக்கு பரவுகிறது.
- இரத்தம் பரிமாற்றம், உறுப்பு மாற்று சிகிச்சை, ஊசிகளை பகிர்ந்து பயன்படுத்துவதன் மூலம் பரவுகிறது.
- ஓட்டுண்ணிகள்,  மூளை மற்றும் பிற முக்கிய உறுப்புகளுக்கு. இரத்தம் மூலம் எடுச்செல்லப்படுகிறது.
- கர்ப்பகாலத்தில் மலேரியா ஏற்படின், அது தாய், கரு மற்றும் பச்சிளம் குழந்தைக்கு ஆபத்தை ஏற்படுத்துகிறது. ஏனெனில் கர்ப்பிணி தாய்மார்கள், நோய் எதிர்ப்பதற்கு குறைந்த திறன் கொண்டவர்ள், ஆதலால் அது மோசமாக வயிற்றில் உள்ள கருவை பாதிக்கிறது.

# மலேரியாவின் அறிகுறிகள்






கண்டறிதல் & சிகிச்சை

## மலேரியாவின் அறிகுறிகள் யாவை?

**தினமும் காய்ச்சல் ஏற்படுவது அல்லது ஒரு நாள் விட்டு ஒரு நாய் சுரம் ஏற் படுவது, இதனுடன் பின்வரும் குறிகுணங்களும் தென்படலாம் :**

- குளிர், நடுக்கம்
- தலைவலி
- குமட்டல் மற்றும் வாந்தி
- உடல்வலி.

## இரத்தபரிசோதனை மற்றும் சிகிச்சை


- மலேரியாவின் அறிகுறிகள் தென்படின், மலேரியாவை உறுதிபடுத்தும் இரத்த பரிசோதனையை அந்த நபர் மேற்கொள்ள வேண்டு.
- அரசு மருத்துவமனையில் இலவசமாக இந்த பரிசோதனையை பெறலாம்.
- சிகிச்சையும் இலவசமாக அரசு மருத்துவமனையில் வழங்கப்படுகிறத.

- மலேரியா, கொசுவால் பரவக்கூடியது
- சுரம், குளிர்,நடுக்கம் ஏற்படுவதே இதன் அறிகுறிகள்.
- மலேரிய ஆய்வு, பரி சோதனை, சிகிச்சை இலவசமாக அரசு மருத்துவமனையில் பெறலாம்.
- மலேரியாவை மருத்துகளால் முழுமையாக குணப்படுத்தலாம்.
- தண்ணீர் பானை மற்றும் குவனைகளை நன்றாக மூடி வைக்கவும்
- கொசு தடுப்பு வளை மற்றம் கொசு போக்கி சுருள்களை பயன் படுத்தவும்.
- பஞ்சாயத்தும், மக்களும் இணைந்து உங்கள் ஊரில் உள்ள கொசுவை ஒழிக்க பாடுபடவேண்டும்.

# யானைகால் நோய்



விரைவீக்கம்



ஆண்குறி




கை








யோனி



மார்பகம்



கால்



# யானைகால நோய்

**யானைகால் நோய் என்றால் என்ன?**

- இதுவும் கொசு கடிப்பதன் மூலம் பரவும் நோய்வகை. இதனை நிணநீர் நோய் என்றும் கூறுவர்.
- கொசு கடிப்பதன் மூலம் நோய், ஒட்டுண்ணியானது இரத்த நாளங்களுக்குள் சென்று பாதிப்பை உண்டாக்குகிறது.
- உடலில் உள்ள பல்வேறு பாகங்களை பாதிக்கிறது.
- கால் வீக்கம், விரை வீக்கம் ஏற்படுவது இந்த நோயின் கடைசி நிலையின் அறிகுறிகள்.
- ஆரம்ப நிலையில் கண்டறிந்தால், மருந்துகள் மூலம் குணப்படுத்தலாம்.
- கடைசி நிலையில் கண்டறிந்தால், அறுவை சிகிச்சை மற்றும் உடற் பயிற்சி போன்றவை தேவைபடும்.
-

**எப்படி கண்டறிவது?**

யானைகால் நோய் என்று சந்தேகத்திற்கு உள்ளவர்கள், இரத்த பரிசோதனைக்கு செல்லவும் நோய் உண்டாக்கும் பூஞ்சைகள், இரவு நேரத்தில்தான் சுறுசுறுப்பாக இருக்கும். ஆதலால் இரத்த மாதிரியை இரவு நேரத்தில் எடுக்கவேண்டும்.

**யானைகால் நோயை எப்படி தடுப்பது?**

அரசு ஒவ்வொரு வருடமும் நவம்பர் மாதம் 11ம் தேதி, அல்பன்டசோல் என்ற மருந்தை அனைத்து மக்களுக்கும் விநியோகிக்கின்றது. இதனை அனைவரும் மருத்துவர் மேற்பார்வையில், அவர்கள் பரிந்துரைத்த அளவில் தவறாமல் எடுத்துக்கொள்ள வேண்டும்.

**(குறிப்பு : 2 வயதிற்கு கீழ் உள்ள குழந்தைகள், கர்ப்பினிகள் மற்றும் நாட்பட்ட வியாதியஸ்தர்கள் இந்த மருந்தை எடுக்க கூடாது).**

முன்னெச்சரிக்கையாது. கொசுதடுப்பு வளை, கொசுவிரட்டியை பயன்படுத்தி கொசு கடிப்பதிலிருந்து பாதுகாத்து கொள்ள வேண்டும்.

## கொசுக்களை கட்டுபடுத்துதல் மற்றும் அழிப்பதன் மூலம் மலேரியா & யானைகால் நோயை தடுத்தல்



பாத்திரத்தை மூடி வைத்தல்



கொசு சுருள் மூலம் புகை உண்டாக்குதல்



கொசுவலை பயன்படுத்துதல்



நீர் குட்டையில் மண்ணெண்ணெய ஊற்றி கொசுவின் இனப்பெருக்கத்தை தடுத்தல்.



கம்பூசியா மீன்களை ஏரியில் வளர்த்தல்.



டி.டி.டீ தெளித்து சுற்றுபுறத்தை தூய்மையாக வைக்கவும்.

# <u>மலேரியா மற்றும் யானைகால் நோயை கொசுக்களை அழிப்பதன் மூலம் எவ்வாறு தடுக்கலாம்?</u>

**கொசு இனப்பெருக்த்தை கட்டுபடுத்தும் வழி முறைகள் :**

- தண்ணீர் தேங்குவதை அனுமதிக்காதீர்.
- கழிவுநீர் அமைப்பை மேம்படுத்த வேண்டும்
- சாக்கடை, கிணறுகள், மற்றும் தண்ணீர் குழிகளை நன்றாக மூடி வைக்கவும்.
- தேவையில்லா செடி, கொடிகள், குட்டை, குளத்தருகில் வளர்ந்திருப்பதை அகற்றவும்.
- மழை காலத்தில், நீர் தேங்கிகிடப்பதை உடனடியாக அப்புறப்படுத்தவும்,
- நீர் ஊருவதங்கு உறுஞ்சு குழிகள் ஏற்படுத்தவும்.
- கம்யூசியா, கப்பி போன்ற மீன் வகைகளை குட்டை, ஏரி போன்ற வற்றிவளரவிடவும்.
- மண்ணெண்ணெய் மற்றும் இதர எண்ணெய்களை, நீர் தேங்கும் இடங்களாகிய நீர் குழிகள், சாக்கடை போன்றவற்றில் ஊற்றவும். இதனால் லார்வா வளர்ச்சியை கட்டுபடுத்தலாம்.

**கொசுகடிப்பதை தவிர்க்க உதவும் பாதுகாப்பு நடவடிக்கைகள்:**

- கொசு வலைகள் பயன்படுத்தவும்.
- வலைகளால் கதவு மற்றும் ஜன்னல்களை மூடவும்.
- வேம்பு இலை கொண்டு இரவு நேரத்தில் வீட்டில் புகைகோடவும்.
- கொசு சுருள், திரவப்புட்டி, தெளிப்பு போன்றவை பயன்படுத்தவும்.
- செல்ல பிராணிகளை. வீட்டிலிருந்து துரத்தில் தள்ளி வைக்கவும்.
- வீட்டில் நல்ல காற்றோட்டம் வேண்டும்.
- உடலை முழுதும் மறைக்ககூடிய துணிகளை அணிய வேண்டும்.

# காசநோய் (டிபி)






இரண்டு வாரத்திற்கு மேல் இருமல்.



இரவில் சுரம், வியர்வை.



இடைறைதல் மற்றும் பசியின்மை

# காசநோய் என்றால் என்ன?

## காசநோய் மக்களை எப்படி பாதிக்கிறது?

மைக்கோபாக்டீரியம் காசறோய் என்ற பாக் டீரியாவால் காசநோய் காதிக்கிறது, இது காற்றில் எச்சில்துளிகள் நீர்துளீகள் மூலம் மற்றவர்களுக்கு நோயாளிகளிடமிருந்து கடத்தப்படுகிறது. வயது மற்றும் பாலினம் எதுவாக இருந்தாலும், குறைவான எதிர்ப்பு சக்கி கொண்டவர்களை இது பெரிதும் பாதிக்கிறது.

ஆதலால், காசநோயால் பாதிக்கப்பட்டவர்கள் தும்மும்கோதும், இருமும்போதும் மூக்கையும் வாயையும் நன்றாக மடி கொள்ளவேண்டும். கொது இடத்தில் அவர்கள் எச்சிலை துப்பக்கூடாது. ஒரு மக்கிலோ (Mug)அல்லது தொட்டியில் துப்ப வேண்டும் உடனடியாக அலைகளை எரித்தோ அல்லது நிறைய நீரால் சுத்தமாக்கப்பட வேண்டும்

## காவநோய் அறிகுறிகள் :

- இரண்டு வாரத்திற்கு மேலாக தொடர் இருமல்
- இரவில் தினந்தோறும் காய்ச்சல் அதனுடன் சுடிய வியர்வை
- பசியின்மை மற்றும் உடல் எடை குறைதல்
- நெஞ்சில் வலி
- உடல் சோர்வு அயர்ச்சி.

## காசநோயின் வகைகள்:

இரண்டு வகை காசநோய் உள்ளன, அவை 1. நுரையிரல் காசநோய்  2.நுரையீரலுக்கு வெளியான காசநோய்.


- நுரையீரல் காசநோய் நுரையிரலை மட்டுமே பாதிக்கும் இது பெரும்பாலும் இருமல், தும்மல், உமிழ் நீர் போன்றவற்றிள் இருந்து காற்றில் பரவும் தன்மை கொண்டது.

- நுரையீரலுக்கு வெளியான காச நோயானது நுரையீரலிலிருந்து வேறுஉடல் உறுப்புகளுக்குப் பரவி செல்கிறது.
  எ–டு : கை அக்குள், கழுத்து, கர்ப்பபை, எலும்பு, தோல்போன்றவை. இது ஒருவரிடமிருந்து மற்றவர்களுக்கு பரவாது.

# காசநோய் – கண்டறிதல் & சிகிச்சை



சளி –சேகரிக்கும் மையம்



நியமிக்கப்பட்ட நுண் ணோக்கியியல்

மையத்தில் – சளி பரிசோதனை



சிகிச்சை




காட் – 1




காட் – 2

டாட்ஸ் சிகிச்சை காசநோய்க்கு இலவசமாக

வழங்கப்படுகிறது

## காசநோய் என்பது:

- சாதாரண தடிமணனப் போன்றே காசநோயும் காற்றினால் தொற்றுதலை ஏற்படுத்தி பரவுகின்றது.
- நோய் எதிர்ப்புசக்கி குறைவாய் உள்ளவர்களை வெகுவாய் இந்நோய் பாதிக்கிறது.
- இரண்டு வாரங்களுக்கு மேலோக தொடர் இருமல் இருப்பின், அவர்களை காசநோய் பரிசோதனைக்கு அனுப்பவும்.
- தும்மும்போதும், இருமும் போதும் வாயை. கையாலோ, துணியாலோ மூடிக்கொள்ளவேண்டும்.
- ஆறு மாத கால கட்டாய சிகிச்சைமூலம் (DOTS) நோயை குணப்படுத்த முடியும்.
- அரசு மருத்துவமனையில் இலவசமாக காசநோய்க்கு சிகிச்சை அளிக்கப்படுகிறது.
- ஊட்டச்சத்து நிறைந்த உணவு உட்கொள்வது மிகவும் அவசியம்.

காசநோய் முற்றிலுமாக டாட்ஸ் (DOTS )சிகிச்சையால் குணப்படுத்தலாம் ஊட்டசத்து நிறைந்த உணவை டாட்ஸ் சிகிச்சையின்போது உட்கொள்வது மிகவும் அவசியம்.

**எம்.டி.ஆர். காசநோய் :** ஆறு மாத காலத்துக்கு மருந்தை எடுக்க தவறினாலோ அல்லது இடையிலே நிறுத்திவிட்டாலோ. எதிர்ப்பு சக்தியுடைய நோய்க்கிருமிகள் உருவாகி நோயைக் குணப்படுத்த முடியாத நிலை ஏற்படும்.


**எய்ட்ஸ் – காசநோய் தொடர்பு :** முன்பு சொன்னதுபோல, காசநோய குறைந்த எதிர்ப்பு சக்தி உள்ளவர்களை அதிகம் பாதிக்கிறது. எச்.ஐ.வி (HIV) யால் பாதிக்கப்பட்டவர்கள், குறைந்த எதிர்ப்புசக்தி கொண்டவரால் இருப்பதால் அவர்களை காசநோய் எளிதில் தாக்குகின்றது.

## காசநோய் எவ்வாறு கண்டறியப் படுகிறது.

காசநோய் என்று சந்தேகிக்கப்பட்டவர்கள் உடனே அருகில் உள்ள அரசு மருத்துவமனைக்கு சென்று தங்களது சளி மாதிரியை பரிசோதனைக்கு தரவும். அதிகாலையில் சளி மாதிரயை கொப்பதே நன்று.

- **DOTS (டாட்ஸ்) என்றால் என்ன?**
- நேரடி கவனிப்பு சிகிச்சை (DOTS), இறைந்த காலம் கொண்டது, டாட்ஸ் வழங்குபவர் முன்பு தான் டாட்ஸ் (DOTS) மருந்துகள் இரண்டு வகைப்படும்.
- காட் – 1 (முதல் பகுப்பு) – முதல் தடவை காசநோயால் பாதித்தவர்கள், 6 மாத காலத்திற்கு இந்த மருந்தை எடுக்கவேண்டும்.
- காட் –2 (இரண்டாம் பகுப்பு) – நோய்மீண்டும் வந்தவர்களுக்கு அல்லது முதல் பகுப்பில் மருந்தை முறைப்படி எடுக்க தவறியவர்களுக்கு 9 மாத காலத்திற்கு இந்த மருந்தை எடுக்கவேண்டும்.
- டாட்ஸ் மருந்துகள் முற்றிலும் இலவசமாக அரசு மருந்துவமனையில் பெறலாம்.
- மருந்து எடுத்துக்கொண்டிருக்கு காலிங்களில், இரண்டு மாதத்திற்கு ஒரு தடைவை சளி பரிசோதனை செய்யும்.

# எச்.ஐ.சி / எயிட்ஸ்




**எயிட்ஸ்**

**AIDS**

A- (எ) – பெறப்பட்ட

I- (ஐ) – நோய்க் தடுப்பாற்றல்

D- (ட்) குறைபாடுகள்

S - (ஸ்) – நோய்க்கூட்டறிகுறி

# எச்.ஐ.வி (HIV)

**எச்.ஐ.வி. என்றால் என்ன:**

எச்.ஐ.சி எனப்டுவது நோய்த்தடுப்பாற்றல் குறைபாடுகளை உண்டாக்கு ரெட்ரோவைரள் வகை (இது மனிதரின் எதிர்பாற்றல் முறைமையின் செயல்படுதிறனை பாதிப் படைய செய்கிறது. இதனால் தொற்று நோய்களாலம், கட்டிகளாலும் மனிதர்களை இலகுவில் பாதிப்படையக் கூடியவர்ளகாகச் செய்கிறது)

எச்.ஐ.வி நோய்யெதிர்பு மண்டலத்தின் முக்கிய உறுப்பான டி செல்லின் உட்பிரிவான சி.டி 4 செல்களை நேரடியாகவோ, மறை முகமாகவோ அழிக்கிறது. இதுவே. ஏனைய தொற்றநோய்கள் உண்டாக காரணமாகி, எயிட்ஸ் நோயை விளைவிக்கிறது.

**எயிட்ஸ் என்றால் என்ன?**

எயிட்ஸ் என்பது பெறப்வட்ட மனித நோய் எதிர்ப்புத் திறன்குறைபாட்ட நோய்க்கூட்டறிகுறி (இது மனிதரின் எதிர்பாற்றல் முறைமையின் செயல்படுதிறனை பாதிப் படைய செய்கிறது. இதனால் தொற்று நோய்களாலம், கட்டிகளாலும் மனிதர்களை இலகுவில் பாதிப்படையக் கூடியவர்ளகாகச் செய்கிறது) வாய்ப்பை எதிர்நோக்கிய நோய்த் தொற்றுகள் எயிட்சு கண்ட மனிதர்களில் முகுதியாகக் காணப்படுகிறது.

**எச்.ஐ.வி மற்று எயிட்களின் வேறுபாடுகள்:**

எச்.ஐ.வி என்பது ஒரு வைரஸ்கிருமி, எயிட்ஸ் என்பது எச்.ஐ.வி வைரஸால் உண்டாகும் நோய் கூட்டம். எச.ஐ.வி தொற்றுலிருந்து எய்ட்ஸ் நோயாக மாறுவதற்கு 8-10 வருடங்கள் ஆகின்றது. எச்.ஐ.வி. மற்றும் எயிட்ஸ் நோயை இரத்த பரிசோதனை மூலம் கண்டறியலாம்.

# பரவும் வழிகள்



பாதுகாப் பற்ற உடலுரவு



ஊசியை பகிர்ந்து கொள்ளுதல்



பாதிக்கப்பட்ட தாய்
மூலம குழந்தைக்கு பரவுதல்



பாதுகாப்பற்ற இரத்த பரிமாற்றம்

மேலே கூறப்பட்ட நானகு வழிகள் மூலமாகவே எச்.ஐ.வி/எயிட்ஸ் பரவுகிறது கொசுகடி, ஒன்றாக சாப்பிடுவதன் மூலமாக பரவாது

## <u>தடுப்பு நடவடிக்கைகள்</u>



உடலுறவின் போது
அனுறை பயன்படுத்தவும்



ஒரு முறை பயன்படுத்திய
ஊசியை மறுமுறை
பயன்படுத்தாமை



கர்ப்பகாலத்தி
எச்.ஐ.வி
பரிசோதனை செய்தல்



எச்.ஐ.வி பரிசோதனைக்குட்பட்ட
இரத்தத்தை மட்டுமே பயன்படுத்தல்

# பரிமாற்றம் மற்றும் தடுப்பு முறைகள்

**எச்.ஐ.வி பெரும்பான்மையாக நான்கு வழிகள் மூலம் பரவுகிறது.**

1. பாதுகாப்பற்ற உடலுறவு
2. உளிசன பகிர்ந்து கொள்ளுதல் அல்லது பலமுறை பயன்படுத்துதல்
3. எச்.ஐ.வி. பாதிக்கப்பட்ட தாயிடமிருந்து குழந்தைக்கு பரவுதல்
4. எச்.ஐ.வி பாதிக்கப்பட்டவரின் இரத்தத்தை பெறுவதால்.

## எச்.ஐ.வி எப்படி பரவாது?

- எச்.ஐ.வி தொற்றிய நபருடன் வாழ்வது
- எச்.ஐ.வி.பாதித்தலரை தொடுவதாலே அல்லது கைகுலுக்குவதால்
- எச்.ஐ.வி. தொற்றுள்ளவருடன் உணவை பகிர்தல்
- குளியலறை மற்றும் கழிவறையை பகிர்தல்
- கொசு கடி
-

## எச்.ஐ.வி/ எயிட்ஸ் இருந்து பாதுகாப்பது எப்படி?

- கணவன், மனைவி உறவில் நம்பிக்கையுடன் இருத்தல். வேறுநபருடன் உடலுறவு கொள்வதை தவிர்த்தல்.
- உடலுறவு கொள்ளும்போது ஆணுரையை கண்டிப்பாக பயன்படுத்தவும் (இவை இலவசமாக அரசு மருந்து கடைகளில், பல்பொருள் அங்காடியிலும் கிடைக்கிறது.

**ஊசி மற்றும்  லான்செட் பயன்படுத்தும் போது:**

- டிஸ்போஸபுள் அல்லது நோய் நுண்மங்கள் ஒழிக்கப்பட்டி ஊசிளை பயன் படுத்தவும.
- ஊசிமூலம் போதை மருந்து எடுத்துக்கொள்வதை தவிர்க்கவும்.
- கர்ப்பத்தின் போது எச்.ஐ.வி பரிசோதனை தவறாமல் செய்யவும்.

**எச்.ஐ.வி யால் பாதித்த இரத்தம் அல்லது இரத்த துணைபொருள்கள்:**

- அங்க்கரிக்கப்பட்ட இரத்த வங்கியில்தான் இரத்தம் பெறவேண்டும்
- நீங்கள் பெறும் இரத்த  எச்.ஐ.வி பரிசோதனைக்கு உட்பட்டதுதானா என்பதை இரத்த வங்கியில் உறுதிசெய்யவும்.

## உங்களுக்கு அருகாமையில் உள்ள எச்.ஐ.வி தொடர்பான சுகாதார வசதிகள்





எச்.ஐ.வி பரிசோதனை மையம்



கட்டாய எச்.ஐ.வி பரிசோதனை




ஏ.ஆர்.டி மையம்




எச்.ஐ.வி– காசநோய் இடையே
குறுக்கு பரிந்துரைகள்

## நம்பிக்கை மையம்:

எச்.ஐ.வி பரிசோதனை இலவசமாக நம் பிக்கை மையத்தில் செய்யப்டுகறது. அனைத்து சமூக சுகாதா மைய், மாவட்ட மருத்துவமனை, துனைமாவட்ட/தாலுக்கா மருத்துவமனை, பஞ்சாயத்து மருத்தவமனை மற்றும் மருத்ததுவ கல்லூரிகளில் உள்ளது. நம்பிக்கை மையத்தில், திறன்மிக்க ஆலோசகர் மூலம் பரிசோதனைக்கு முன்பும், பின்பும் ஆலோசனை வழங்கப்படுகிறது. பரிசோதனை முடிவு இரகசியம் காக்கப்படும்.

## சிடி4 பரிசோதனை:

இரத்தத்தில் சிடி4 டி நிண அணுக்களில் உள்ள சிடி4 அளவை ஆய்வு கூடத்தில் பரிசோதனை செய்து கண்டறிவது. சிடி4 அணுவில் இருக்கக்கூடியது. இதுவே நம் உடலில் நோய் எதிர்ப்பு சக்தி க்கும், வைரஸ், பாக்டீரியா போன்றவற்றை கண்டறிந்த உடலிலிருந்து எதிர்ப்பதற்கும் ஆதாரமாய் உள்ளது

## ஏ.ஆர்.டி

ஏ.ஆர்.டி என்பது மூன்று வகையான மருந்தின் கூட்டு இது எச்.ஐ.வி யால் பாதிக்கப்பட்டவர்களுக்கு அரசு மருத்துவமனையிலும், மருத்துவ கல்லூரியலும் இலவசமாக வழங்கப்படுகிறது.

# பால்வினை நோய் & இனப்பெருக்க பாதை நோய் தொற்று



வெள்ளை படுதல்



அடிவயிறு வலி



ஆண் குறியில் சீழ் வடிதல்



ஆண்குறியில் கொப்புளம் / புண்

## பால்வினைநோய் & இனப்பெருக்க உறப்பு தொற்று நோய்

பால்வினைன நோய் என்பது பாலியல் தொடர்பு மூலம் நோய் தொற்று உள்ளவரிடம் இருந்து மற்றொருவருக்கு பரவுக்கூடியது. இந்த நோய் தொற்று எந்த ஒரு அறிகுறியையும் காண பிக்காது.

பெண் இனபெருக்க உறுப்பு தொற்று என்பது மேல் இனபெரு;க உறுப்பு பாதைகளாகிய கருமுட்டை குழாய்,, கருவகம் மற்றும் கர்ப்பகை அல்லது கீழ் இனபெருக்க உறுப்புகளாகிய யோனி, கருப்பை கழுத்து, கருப்பைவாய் இவற்றில் ஏற்படக் கூடியது.

பால்வினை நோய்க்கான சிகிச்சையே பெண்இனபெருக்க உறுப்பு தொற்றிற்கும் பயன்படுத்த படுகிறது.

### பால்வினை தொற்று அறிகுறிகள்

- யோனி கசிவு அதிகரித்து காணல்
- ஆண்குறியிலிருந்து கசிவு ஏற்படுதல்
- ஆசனவாய் அல்லது பிறப்புறுப்பை சுற்றிலும் அரிப்பு ஏற்படுதல்
- புண்கள் அல்லது தடிப்பு பிறப்புறுப்பை சுற்றி காணுதல்
- உடலுறவின் போது வலிஏற்படுதல்
- இடுப்பு பகுதியில் வீங்கிய சுரப்பிகள்
- சுரம், தலைவலி, உடல் அயர்ச்சி
- இடுப்பு வலி

### பெண் இனபெருக்க தொற்று அறிகுறிகள்

- வெள்ளை படுதல்
- அடினை  வலி
- சிறுநீர் எரிச்சல்
- யோனியில் அரிப்பு
- யோனிக் கசிவு அல்லது சீழ்வடிதல்
- யோனித்துவாரத்தை சுற்றி புண்கள் ஏற்படுதல்
- யோனி வீங்கி காணப்படுதல்.

பால்வினை நோயால் பாதிக்கப்பட்டவர்களை பத்து மடங்கு அதிவேகமாக எச்.ஐ.வி நோய் தாக்குகிறது என்று ஆய்வு கூறுகிறது. நமது அரசு மருத்துவமனையில் இலவசமாக சிகிச்சை அளிப்பதை பெற்றுக்கொண்டு பயனடையவும்.

# எச்.ஐ.வி / எயிட்ஸ் இருந்து பாதுகாப்பான வாழ்க்கை



## எச்.ஐ.வி பற்றியமுக்கிய பகிர்வுகள்:

- எச்.ஐ.வி என்பது ஒரு நுண்ணுயர்கிரமி (வைரஸ்) எயிட்ஸ் என்பது இந்து கிருமியால் உண்டாகும் நோய்கூட்டம். எச்.ஐ.வி யிலிருந்து எயிட்ஸ் உண்டாவதற்கு 8 – 10 வருடமாகும
- எச்.ஐ.வி பரவும் வழிகள் : 1 பாதுகாப்பற்ற உடலுறவு 2.ஊசியை பகிர்ந்துகொள்ளுதல் 3.பாதிக்கப்பட்ட தாயிடமிருந்து குழந்தைக்கு 4. பாதுகாப்பற்ற இரத்த பரிமாற்றம்.
- பால்வினை மருந்துகள் இலவசமாக அரசு சுகாதார மையத்தில் கிடைக்கிறது.
- எச்.ஐ.வி. காசநோய் குறுக்கு பரிந்துறை முக்கியம்.

## வீட்டிற்கு எடுத்து செல்லும் செய்திகள:

- எச்.ஐ.வி யாரை வேண்டுமானாலும் பாதிக்கலாம்.
- எயிட்ஸை முற்றிலுமாக குணப்படுத்தமுடியாது. அகவே தனிமனித பொறுப்பே முக்கியம்.
- ஒருவரின் அடையாளங்களை பகிர்ந்துக்கொள்ளாமலே, இந்த பரிசோதனையை செய்துகொள்ளலாம்.
- எச்.ஐ.வி யால் பாதிக்கப்பட்டவர்களும், ஆரோக்கியமான வாழ்க்கைமுறை மற்றும் ஏ.ஆர்.டி மருந்துகள் மூலம் நம்பிக்கையான வாழ்க்கையை வாழலாம்.
- உயிரியல் மற்றும் சமூக காரணிகளால், பெண்களே எச்.ஐ.வி யால் அதிகம் பாதிக்கப்படுகின்றனர்.